முழுப் பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2023 (2024)

# 47- இஸ்லாமிய நாகரிகம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

සියලු ම හිමිකම් ඇව්රිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | | |
|---|---|---|
| ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I<br>இஸ்லாமிய நாகரிகம் I<br>Islamic Civilization I | 47 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள்:**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இஃஜாஸுல் குர்ஆன் எனும் பதம் குறிப்பது
(1) அல்-குர்ஆன் அருளப்பட்ட ஒழுங்கு முறையாகும்.
(2) அல்-குர்ஆன் தொகுக்கப்பட்ட முறையாகும்.
(3) அல்-குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறையாகும்.
(4) அல்-குர்ஆன் அருளப்பட்டமைக்கான காரணங்களாகும்.
(5) அல்-குர்ஆனின் அற்புதமாகும்.

**2.** பின்வரும் எப்பிரதேசங்களின் போர்ச்சூழல் அல்-குர்ஆன் தொகுக்கப்படுவதற்குப் பிரதான காரணமாக அமைந்தது?
(1) ஆர்மேனியா, அஸர்பைஜான்
(2) யமாமா, ஆர்மேனியா
(3) ஆர்மேனியா, டியூனீசியா
(4) யர்மூக், ஆர்மேனியா
(5) தபூக், யமாமா

**3.** தப்ஸீர், வரலாறு ஆகிய துறைகளின் தந்தை எனப்படும் இமாம் தபரி (ரஹ்) அவர்களைச் சார்ந்தோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) ஜரீரிய்யூன்
(2) ஹர்பிய்யூன்
(3) ஹகமிய்யூன்
(4) ஹரீரிய்யூன்
(5) முஹத்தீஸுன்

**4.** இப்னு கல்தூனின் கருத்துப்படி நாகரிகம் என்பது,
(1) சமூக வளர்ச்சியில் முன்னேற்றமடைந்த காலகட்டமாகும்.
(2) அறிவியல் முயற்சிகள், அழகியற் கலைகள், சமூகப் பழக்கவழக்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.
(3) நகர வாழ்வின் நிகழ்வுகள் அல்லது பெறுபேறுகள் ஆகும்.
(4) ஒரு இனத்தின் அல்லது வகுப்பினரின் பண்புகள் ஆகும்.
(5) மனித ஆற்றல்கள், பௌதீக வளங்கள், காலம் ஆகியவற்றின் ஒன்றிணைவாகும்.

**5.** ஹதீஸ்களை அதன் அறிவிப்பாளர்களின் பெயர் ஒழுங்கில் நூலுருப்படுத்திக் கொள்ளும் முறையானது,
(1) முஸ்னத் ஆகும்.
(2) ஸுனன் ஆகும்.
(3) ஜாமிஉ ஆகும்.
(4) ஷமாஇல் ஆகும்.
(5) முஸ்தத்ரக் ஆகும்.

**6.** இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய மிகச் சரியான கருத்து யாது?
(1) மக்கா, மதீனா சமூகங்களின் பழக்கவழக்கங்களாகும்.
(2) கூபா, பஸரா மக்களின் மரபுகளாகும்.
(3) இஸ்லாமிய சிந்தனைகளுக்கு உட்பட்டவையாகும்.
(4) உமையா கலீபாக்கள் அறிமுகப்படுத்தியவையாகும்.
(5) உதுமானியர்களின் வழக்காறுகளாகும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

Past Papers Wiki

7. கொம்டே குறிப்பிட்டதன்படி சமயம் என்பது,
(1) இனத்தின் எல்லா செயற்பாடுகளுக்குமுரிய அறம் சார்ந்த அடிப்படையாகும்.
(2) வாழ்வின் முழுமையை உள்ளடக்கியுள்ள ஒரு துறையாகும்.
(3) பக்தியோடு இறைவனை வழிபடுதலாகும்.
(4) மக்களை பக்குவப்படுத்தக் கூடியதும் இறைவனிடம் நம்பிக்கை வைப்பதுமாகும்.
(5) ஓரிறைக் கொள்கையை வலுவாகக் கடைப்பிடிப்பதாகும்.

8. ஜாஹிலிய்யாக் காலத்தில் ஒரு கோத்திரத்திற்குத் தலைவராகத் தெரிவுசெய்யப்படுபவரிடம் எதிர்பார்க்கப்பட்ட தகைமைகள் யாவை?
(1) நிறம், மொழி, பணம், வீரம், அழகு
(2) மொழி, அனுபவம், வீரம், பேச்சாற்றல், குலப்பெருமை
(3) அறிவு, அனுபவம், வல்லமை, வீரம், நன்னடத்தை, செல்வாக்கு
(4) நன்னடத்தை, செல்வாக்கு, நிறம், மொழி, அழகு
(5) அறிவு, அனுபவம், பணம், குலப்பெருமை, வீரம்

9. அஸபிய்யா என்பது
(1) நிபந்தனையின்றி கோத்திரத்திற்கு விசுவாசமாக நடப்பதாகும்.
(2) கோத்திரத்தைக் காட்டிக் கொடுப்பதாகும்.
(3) கோத்திரத்துக்கு எதிராகப் போராடுவதாகும்.
(4) நிபந்தனைகளுடன் கோத்திரத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாகும்.
(5) விரும்பியவாறு விரும்பிய கோத்திரத்துடன் இணைந்து வாழ்வதாகும்.

10. ஜாஹிலிய்யாக் காலத்தில் மேன்மக்கள் பின்பற்றிய திருமண ஒப்பந்தமுறை
(1) பாசிக் (2) ஸாலிஹ் (3) ஸிஹ்கார் (4) முத்ஆ (5) பாதில்

11. இஸ்லாத்தை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்ட சிலர் துன்புறுத்தலுக்கு ஆளாகினர். அவர்களைப் பாதுகாக்கும் வகையில் நபி (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த பிரதேசம் எது?
(1) மதீனா (2) யெமன் (3) தாயிப் (4) கூபா (5) ஹபசா

12. "உங்களது வருகையின் நோக்கம் யாது?" என பாரசீக மன்னர் ருஷ்தும் வினவியதற்குப் பதிலளித்த நபி (ஸல்) அவர்களின் தூதுவர்
(1) அலி (ரழி) ஆவார்.
(2) இப்னு மஸ்ஊத் (ரழி) ஆவார்.
(3) முஆத் பின் ஜபல் (ரழி) ஆவார்.
(4) உபை பின் ஆமிர் (ரழி) ஆவார்.
(5) ஜஃபர் பின் அபீதாலிப் (ரழி) ஆவார்.

13. ஹதீஸ்களின் தூய்மையைப் பாதுகாக்கவென உருவான ஹதீஸ் திறனாய்வுக் கலையம்சங்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி யாது?
(1) அஸ்மாஉர் ரிஜால், இல்முல்ஜரஹ் வத்தஃதீல், உஸூலுல் ஹதீஸ்
(2) முதவாதிர், ஆஹாத், அஸ்மாஉர் ரிஜால்
(3) இஸ்னாத், மதன், அஸ்மாஉர் ரிஜால்
(4) இல்முல்ஜரஹ் வத்தஃதீல், இஸ்னாத், உஸூலுல் ஹதீஸ்
(5) அஸ்மாஉர் ரிஜால், இஸ்னாத், உஸூலுல் ஹதீஸ்

14. இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்களால் ஏகோபித்து எடுக்கப்படும் முடிவானது
(1) கியாஸ் எனப்படும்.
(2) இஜ்மாஉ எனப்படும்.
(3) கௌலுஸ் ஸஹாபி எனப்படும்.
(4) இஸ்திஹ்ஸான் எனப்படும்.
(5) இஸ்திஸ்ஹாப் எனப்படும்.

15. அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா என்ற குழுவினர் வாழ்ந்த இடம் எது?
(1) மஸ்ஜித் அல் ஹராம்
(2) மஸ்ஜித் அல் குபா
(3) மஸ்ஜித் அல் அக்ஸா
(4) மஸ்ஜித் அந் நபவி
(5) மஸ்ஜித் அல் குர்துபா

16. கிதாபுஸ்ஸமா, இக்துல் பரீத் ஆகிய நூற்கள் எக்கலை சார்ந்தவைகளாகும்?
(1) தப்ஸீர் கலை
(2) பிக்ஹ் கலை
(3) இசைக் கலை
(4) தத்துவக் கலை
(5) நாட்டியக் கலை



CamScanner

17. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் ஆட்சிக் காலத்தில் மருத்துவத்துறையில் சேவையாற்றிய முஸ்லிம்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) லேகம் (2) அந்தரங்க துரே (3) பொன்லிய
(4) மடிகே பத்தே நிலமே (5) பெஹேத்கே முகாந்திரம் நிலமே

18. அறிஞர் சித்திலெப்பை அவர்களினால் எழுதப்பட்ட ஆன்மீகம் பற்றிய நூல்
(1) பதாவா ஆலம்கீரி (2) அஸ்ராருல் ஆலம் (3) பத்ஹுத் தையான்
(4) அல்மகானி (5) ஷரஹுல் வரகாத்

19. பின்வரும் நிகழ்வுகளைக் கருதுக.
A - தூமதுல் ஜன்தல் நிகழ்வு
B - சிப்பீன் நிகழ்வு
C - முடியாட்சியின் தோற்றம்
D - கர்பலா நிகழ்வு
E - கிலாபத்தின் தலைநகராக கூபா மாறுதல்
மேற்கூறிய நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி எழுதினால் அமையும் சரியான விடை யாது?
(1) A, C, D, E, B (2) B, D, A, C, E (3) C, B, D, E, A
(4) D, E, B, A, C (5) E, B, A, D, C

20. "இந்த மனிதர் உயிர்வாழும் வரை குழப்பங்களின் வாயில் அடைக்கப்பட்டிருக்கும்" என நபி (ஸல்) அவர்களால் குறிப்பிடப்பட்ட ஸஹாபி
(1) காலித் பின் வலீத் (ரழி) ஆவார்.
(2) உஸ்மான் பின் அப்பான் (ரழி) ஆவார்.
(3) உமர் பின் கத்தாப் (ரழி) ஆவார்.
(4) அலி பின் அபீதாலிப் (ரழி) ஆவார்.
(5) அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (ரழி) ஆவார்.

21. யூனானிய மருத்துவ முறை அறிமுகமாவதற்கு அடிப்படையாக அமைந்த மருத்துவ முறைகள் எவை?
(1) கிரேக்க - அரேபிய மருத்துவ முறைகள்
(2) ஆங்கில - அரேபிய மருத்துவ முறைகள்
(3) ஆங்கில - சித்த மருத்துவ முறைகள்
(4) கிரேக்க - ஆங்கில மருத்துவ முறைகள்
(5) ஆயுர்வேத - சித்த மருத்துவ முறைகள்

- பின்வரும் ஸஹாபிகளை அடிப்படையாகக் கொண்டு 22 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு விடை தருக.
A - உஸ்மான் பின் அப்பான் (ரழி)
B - அபூபக்கர் சித்தீக் (ரழி)
C - அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி)
D - அலீ பின் அபீதாலிப் (ரழி)
E - அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி)
F - ஜஃபர் பின் அபீ தாலிப் (ரழி)
G - வஹ்ப் பின் அபி கப்ஸா (ரழி)
H - ஸஅத் பின் அபி வக்காஸ் (ரழி)
I - கதீஜா பின் குவைலத் (ரழி)
J - அம்ர் பின் ஆஸ் (ரழி)

22. ஹுதைபிய்யா உடன்படிக்கையில் கலந்து கொண்டவர்கள் யாவர்?
(1) A, D (2) C, F (3) D, E (4) G, J (5) H, J

23. அபிசீனியாவுக்கான ஹிஜ்ரத்தில் கலந்து கொண்டவர்கள் யாவர்?
(1) B, D (2) D, F (3) E, G (4) E, H (5) F, J

24. அல்-குர்ஆன் விளக்க உரையை வழங்குவதில் தேர்ச்சி பெற்றிருந்தவர்கள் யாவர்?
(1) A, D (2) B, F (3) C, E (4) E, J (5) G, I

25. ஆசியாக் கண்டத்தில் இஸ்லாமிய பிரச்சாரத்தை மேற்கொண்டவர்கள் யாவர்?
(1) A, D (2) B, C (3) D, F (4) G, H (5) H, J



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

Past Papers Wiki

26. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - ஆண்களுக்கு பெண்கள் மீதுள்ள உரிமைகள் போன்றே ஆண்கள் மீது பெண்களுக்கும் உரிமைகள் உண்டு.

B - மகாஸித் ஷரீஆ என்பது சட்டங்களுக்குப் பின்னால் உள்ள நியாயத்தை விளக்குகின்றது.

C - இலங்கையில் வெளிவந்த முதலாவது பத்திரிகையாக 'முஸ்லிம் பாதுகாவலன்' கருதப்படுகின்றது.

D - கி.பி. 1272 இல் முதலாம் புவனேகபாகு ஆட்சிபீடம் ஏறுவதற்கு இராணுவ உயர் அதிகாரி தாகூர் பங்களிப்புச் செய்துள்ளார்.

E - இலங்கை சட்ட சபையில் வாப்பிச்சி மரைக்கார் முதலாவது முஸ்லிம் பிரதிநிதியாக செயற்பட்டார்.

மேற்குறித்த கூற்றுகளில் மிகச்சரியான கூற்றுகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, E (3) A, C, D (4) B, C, D (5) B, C, E

27. யத்ரிப், பக்கா எனும் புராதன நகரங்கள் முறையே,

(1) எகிப்து, மதீனா என்பன ஆகும்.
(2) பலஸ்தீன், மதீனா என்பன ஆகும்.
(3) சிரியா, மக்கா என்பன ஆகும்.
(4) மதீனா, மக்கா என்பன ஆகும்.
(5) பலஸ்தீன், சிரியா என்பன ஆகும்.

28. 'சமூக நலன்' எனும் மொழிக்கருத்துடைய துணை மூலாதாரம் எது?

(1) இல்லத் (2) ஹுகும் (3) இஸ்திஸ்லாஹ்
(4) புர்உ (5) உர்பு

29. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - இமாம்கள் மத்ஹபுகளைத் தோற்றுவித்தமை

B - மத்ஹப் மீது கொண்ட அளவு கடந்த பற்று

C - முஜ்தஹிதுகளைப் புறக்கணித்து முகல்லிதுகள் நீதிபதிப் பொறுப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டமை

D - மத்ஹப் சிந்தனைகள் நாலுருப் பெற்றிருந்தமை

E - மத்ஹபுடைய இமாம்கள் தத்தமது மத்ஹபுகளை முன்னிலைப்படுத்திப் பிரச்சாரம் செய்தமை

மேற்குறிப்பிட்டவற்றுள் ஹிஜ்ரி 12 ஆம் நூற்றாண்டு வரை இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டமைக்கான காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, D, E

30. X நிரலில் மகாஸித் மற்றும் ஷரீஆ சட்டத்துறை தொடர்பான நூல்களும் Y நிரலில் அதன் ஆசிரியர்களும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.

| | X | Y |
|---|---|---|
| (i) | அஸ்ஸலாத் வமகாஸிதுஹா | A - அபூ மன்சூர் அல்மாத்ருதி (ரஹ்) |
| (ii) | ம.்ஹத் ஷராஇ | B - இமாம் அபூ ஹனீபா (ரஹ்) |
| (iii) | அல்புர்ஹான் | C - இமாம் ஜுவைனி (ரஹ்) |
| (iv) | பிக்ஹுல் அக்பர் | D - முஹம்மத் பின் அலி (ரஹ்) |
| (v) | அல் - முஅத்தா | E - இமாம் மாலிக் (ரஹ்) |

X நிரலிலுள்ள நூல்களின் பெயர்களுக்கேற்ப Y நிரலிலுள்ள அதன் ஆசிரியர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான விடையைத் தெரிவுசெய்க.

(1) A, C, D, E, B (2) B, A, C, E, D (3) C, A, B, D, E
(4) C, D, B, E, A (5) D, A, C, B, E

- பின்வருவன இஸ்லாமியக் கலைகளுடன் தொடர்புறும் சில கலைச்சொற்களாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு 31 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - மதன் I - அர்ரிகா
B - மாடவில் J - சஹீஹைன்
C - குத்தாபுல் வஹி K - அல் ஹம்ரா
D - பானத் ஸுஆத் L - முபஸ்ஸிர்
E - மிஸ்மார் M - இஸ்னாத்
F - ஜம்முல் குர்ஆன் N - கத்து பாபூரி
G - அஸ்ஸுஜூஸ் O - உத் காமில்
H - குப்பதுஸ் ஸக்ரா P - தவாப்

31. அழகியல் கலையம்சங்களுடன் தொடர்புறும் பதங்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B, D (2) A, C, E (3) B, H, K (4) C, D, E (5) E, J, M



CS CamScanner

32. இசைக் கலையுடன் தொடர்புறும் பதங்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) C, D, E (2) D, E, O (3) D, G, I (4) F, G, P (5) N, L, K

33. அல்-குர்ஆனிய கலை சார்ந்த பதங்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, C, E (2) A, F, L (3) B, D, P (4) C, E, F (5) C, F, L

34. ஹதீஸ் கலையுடன் தொடர்புறும் பதங்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, E, P (2) A, F, J (3) A, J, M (4) B, D, F (5) B, J, P

35. எழுத்தணிக் கலையுடன் தொடர்புறும் கலைச்சொற்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) E, F, P (2) G, I, K (3) G, I, N (4) G, M, O (5) I, M, P

36. அல்-குர்ஆனில் 'தாய் தந்தையரை நோக்கி சீ என்றும் கூறாதே' என்ற வசனம்
(1) இபாரத்துன் நஸ் ஆகும். (2) இக்திலாஉன் நஸ் ஆகும்.
(3) இஷாரதுன் நஸ் ஆகும். (4) முதஷாபிஹ் ஆகும்.
(5) நாஸிக் மன்சூக் ஆகும்.

37. பின்வருவன நம்பிக்கையின் அடிப்படையில் வேறுபட்ட சிந்தனைப் பிரிவுகளின் சில கருத்துக்களாகும்.
A - இமாம்கள் தவறு செய்வதிலிருந்து பாதுகாப்புப் பெற்றவர்கள்.
B - அல்-குர்ஆன் படைக்கப்பட்டது.
C - பெரும்பாவம் செய்தவனை அல்லாஹ் தண்டிப்பான் அல்லது மன்னிப்பான்.
D - சுவனமும் நரகமும் மறுமை ஏற்பட்டதன் பின்னரே உருவாக்கப்படும்.
E - நபித்துவம் முற்றுப் பெறவில்லை.
மேற்குறிப்பிட்டவற்றுள் முஃதஸிலாக்கள் சார்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய விடை எது?
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, D, E

38. நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின் சகிபது பனீ ஸாஇதாவில் ஒன்றுகூடிய அன்ஸாரிகள் தமக்கென தலைமைத்துவத்துக்காக எந்த நபித்தோழரை ஆலோசித்தனர்?
(1) தல்ஹா (ரழி) (2) சுபைர் (ரழி) (3) அபூ உபைதா (ரழி)
(4) ஸஅத் பின் உப்பாதா (ரழி) (5) பஷீர் பின் ஸஅத் (ரழி)

39. ஒரு தேவை கருதி நபி (ஸல்) அவர்கள் வெளியே செல்லும் சந்தர்ப்பங்களில் தமது பிரதிநிதியாக மற்றொருவரை அமர்த்திச் செல்வார்கள். இங்கு பிரதிநிதி என்பது,
(1) ஆமில். (2) அமீர். (3) நாஇப். (4) வலி. (5) கலீபா.

40. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - ஹிஜ்ரத்தின் வழிகாட்டியாக செயற்பட்டார்.
B - காதிபுல் வஹியாகக் கடமையாற்றினார்.
C - யெமன் பிரதேசத்துக்குத் தூதுவராக நியமிக்கப்பட்டார்.
D - அல்-குர்ஆன் தொகுக்கும் பணியின் தலைவராகச் செயற்பட்டார்.
E - ஹதீஸ் தொகுக்கும் பணியில் ஈடுபட்டார்.
F - அபரானி மொழியைக் கற்பதற்குப் பணிக்கப்பட்டார்.
மேற்குறிப்பிட்டவற்றுள் சைத் பின் ஸாபித் (ரழி) அவர்களுடன் தொடர்புறும் கூற்றுகளைக் கொண்ட விடை எது?
(1) A, C, E (2) A, D, F (3) B, C, E (4) B, D, F (5) C, E, F

41. நபி (ஸல்) அவர்களின் அரசியல் உடன்படிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஸஹாபி
(1) அலி (ரழி) (2) முஆவியா (ரழி)
(3) அபூ உபைதா (ரழி) (4) முஆத் பின் ஜபல் (ரழி)
(5) அப்துல்லாஹ் பின் உமர் (ரழி)

42. போர்க்காலங்களின்போது கவிஞர்கள் தமது அணியைப் புகழ்ந்தும், எதிரணியை இகழ்ந்தும் பாடிய கவிதைகள் முறையே
(1) முஅல்லகா, முனாஜாத் என்பன ஆகும்.
(2) மத்ஹ், ஹிஜா என்பன ஆகும்.
(3) கஸ்ல், முபஷ்ஷராத் என்பன ஆகும்.
(4) ஸஜஉ, ரஜ்ஸ் என்பன ஆகும்.
(5) ஹமாஸா, கஸீதா என்பன ஆகும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

43. ஜாஹிலிய்யாக் காலத்தில் அப்துத் தார் இன் மறைவுக்குப் பின் க.'பாவை நிர்வகிப்பதில் அவரது பிள்ளைகள் இரு குழுவினராகப் பிரிந்து செயற்பட்டனர். அக்குழுக்களாவன,
(1) பனூபக்ர், ஹில்புல் அஹ்லாப் என்பன ஆகும்.
(2) பனூதக்லப், பனூகுறைழா என்பன ஆகும்.
(3) அவுஸ், ஹில்புல் முதய்யிபீன் என்பன ஆகும்.
(4) ஹில்புல் முதய்யிபீன், ஹில்புல் அஹ்லாப் என்பன ஆகும்.
(5) ஹில்புல் அஹ்லாப், பனூ உமையா என்பன ஆகும்.

44. ஜாஹிலிய்யாக் காலத்தில் நபி இப்ராஹிம் (அலை) அவர்களது மார்க்கத்தைப் பின்பற்றியவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) முஷ்ரிக்குகள் (2) முனாபிக்குகள் (3) ஹனீப்கள் (4) மஜூஸிகள் (5) நுஜூமிகள்

45. ஸஹீபா ஸாதிகா எனும் பெயரில் ஹதீஸ்களைத் திரட்டி வைத்திருந்த ஸஹாபி யார்?
(1) அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) (2) அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி)
(3) அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) (4) அப்துல்லாஹ் பின் அபீ வக்காஸ் (ரழி)
(5) அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி)

- 46 தொடக்கம் 50 வரையிலான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அச்சோடிகள் பற்றிய மிகப்பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 46. | இஸ்லாமிய நாகரிகம் முதலில் சமயமாகவும், பின்னர் நாகரிகமாகவும் வளர்ச்சி கண்டது. | இஸ்லாமிய நாகரிகம் சர்வதேசமானது என்பதை அந்நாகரிகத்தின் தனிமனித, குடும்ப, சமூக, தேசிய, சர்வதேச வழிகாட்டல்கள் ஒப்புவிக்கின்றன. |
| 47. | அஷ்அரிய்யாக்கள் என்போர் அல்-குர்ஆன், அஸ்ஸுன்னா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டோர்களாவர். | தீவிர பகுத்தறிவுவாத சிந்தனை கொண்ட மு.'தஸிலாக்களின் அகீதாவை எதிர்த்த அஷ்அரிய்யா இயக்கத் தலைவரை நாஸிருஸ் ஸுன்னா என அழைத்தனர். |
| 48. | கி.பி. 1232 இல் தம்பதெனிய ஆட்சியின்போது அவ்வரசுக்கு வலுவூட்டும் சமூகமாக முஸ்லிம்கள் திகழ்ந்தனர். | கி.பி. 1283 இல் எகிப்திய தூதுக்குழுவின் தலைமைப் பொறுப்பு அபூ உஸ்மான் என்பவருக்கு வழங்கப்பட்டது என்ற தகவல் யாப்பகுவ ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்த உயரிடத்தை நிரூபிக்கின்றது. |
| 49. | கலீபா ஸுலைமான் தனக்குப் பின்னர் ஒரு வாரிசை நியமித்ததன் மூலம் பல சீர்திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட காரணமாய் அமைந்தார். | கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவரது நியமனத்தின் பின்னர் பைதுல்மாலை ஒழுங்குபடுத்துதல், சமய சூழலை ஏற்படுத்துதல், ஹதீஸ்களை தொகுக்கும் பணி போன்ற பல்வேறு சீர்திருத்த முயற்சிகளை முன்னெடுத்தார். |
| 50. | நபி (ஸல்) அவர்களின் மனைவி அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் மதீனா ஹிஜ்ரத்தின்போது அவருக்குத் துணையாக இருந்தார். | ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களின் ஆலோசனைகளை ஏற்று நடைமுறைப்படுத்தினார். |

* * *



CamScanner

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

| විෂයය අංකය<br>பாட இலக்கம் | 47 | විෂයය<br>பாடம் | இஸ்லாமிய நாகரிகம் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 5 | 21. | 1 | 31. | 3 | 41. | 1 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 1 | 32. | 2 | 42. | 2 |
| 03. | 1 | 13. | 1 | 23. | ~~5~~ All | 33. | 5 | 43. | 4 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 3 | 34. | 3 | 44. | 3 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 4 | 35. | 3 | 45. | 1,5 |
| 06. | 3 | 16. | 3 | 26. | All | 36. | 1 | 46. | 2 |
| 07. | 2 | 17. | 5 | 27. | 4 | 37. | All | 47. | ~~1~~ 1 5 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 3 | 38. | 4 | 48. | 1 |
| 09. | 1 | 19. | 5 | 29. | 4 | 39. | 3 | 49. | 5 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 5 | 40. | 4 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

CamScanner

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II
இஸ்லாமிய நாகரிகம் II
Islamic Civilization II

47 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) நாகரிகம், பண்பாடு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (ii) இஸ்லாமிய நாகரிகம் தோன்றி வளர்வதற்கு ஏதுவாய் அமைந்த பின்னணிக் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (iii) இஸ்லாமிய நாகரிக வளர்ச்சிக்கு அல்-குர்ஆன் முன்வைக்கும் வழிகாட்டல்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   (iv) இஸ்லாமிய நாகரிக வளர்ச்சியில் அப்பாஸியர்களின் பங்களிப்புகள் நான்கினை விளக்குக.
   (v) மஸ்ஜித் கட்டிடக்கலையின் பிரதான கூறுகள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றை விளக்குக.
   (04 × 5 = 20 புள்ளிகள்)

2. (i) கிலாபத், இமாரத் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (ii) உஸ்மான் (ரழி) அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (iii) ஒரு முஸ்லிம் தனது குடும்பத்துக்காகப் பேண வேண்டிய கடமைகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (iv) இறை சட்டத்தின் சிறப்பியல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (v) சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் ரிஸாலத் முன்வைக்கும் வழிகாட்டல்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   (04 × 5 = 20 புள்ளிகள்)

3. (i) போலி ஹதீஸ்களின் தோற்றத்துக்கான காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
   (ii) அர்கானுல் கியாஸினைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக.
   (iii) அரபு எழுத்தணி ஒரு தனிக் கலையாக வளர்ச்சி கண்டமைக்கான காரணிகள் நான்கினைத் தெளிவுபடுத்துக.
   (iv) மருத்துவத்துறை அறிஞர் அபூபக்கர் ஸகரிய்யா அர்ராஸி அவர்களின் பங்களிப்புகள் நான்கினை விளக்குக.
   (v) அகீதாவில் முரண்பாடு கொண்ட பிரிவினரால் ஏற்பட்ட விளைவுகள் நான்கினை விபரிக்க.
   (04 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) அல் - குர்ஆனைப் பாதுகாப்பதில் ஸஹாபாக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.
   (ii) தப்ஸீர் கலையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்குக.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

5. (i) கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (றஹ்) அவர்களினது ஆட்சியின் சிறப்பியல்புகளை விபரிக்க.
   (ii) அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத், ஷீஆ ஆகிய பிரிவினரின் கொள்கை வேறுபாடுகளை விபரிக்க.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

6. (i) கலீபாவாகப் பதவியேற்ற அபூபக்கர் (றழி) அவர்கள் எதிர்கொண்ட சவால்களை விளக்குக.
   (ii) இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் சிற்றரசுகளின் தோற்றம் ஏற்படுத்திய விளைவுகளைத் தெளிவுபடுத்துக.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

7. (i) ஜாஹிலிய்யாக் கால சமூகக் கட்டமைப்புப் பற்றி தெளிவுபடுத்துக.
   (ii) சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதில் ஷரீஆவின் பங்கு பற்றி விளக்குக.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

8. (i) அரேபிய - இலங்கை உறவினால் ஏற்பட்ட விளைவுகளை விபரிக்க.
   (ii) சுதந்திரத்துக்கு முன்னரான இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்புகள் பற்றி விபரிக்க.
   (10 × 2 = 20 புள்ளிகள்)

***

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

# பகுதி 1

வினா இல: 01.

**(i) நாகரிகம், பண்பாடு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.**

| நாகரிகம் | பண்பாடு |
|---|---|
| • நாகரிகம் என்பது ஒரு சமூகத்திற்கு உரித்தான நம்பிக்கைகள், நடை, உடை, பாவனைகள் மரபுகள், தனித்துவமான நடத்தைகள், கலை, கலாசாரம், சமய நம்பிக்கைகள் போன்றவற்றின் சான்றான வெளிப்பாடுகள். | • பண்பாடு என்பது ஒரு சமூகத்திற்கு உரித்தான நம்பிக்கைகள், நடை, உடை, பாவனைகள் மரபுகள், தனித்துவமான நடத்தைகள், கலை, கலாசாரம், சமய நம்பிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய தொகுதி. |
| • உளப்பண்பு, சிந்தனை, உணர்வுகளின் புற வெளிப்பாடுகள் (நடை, உடை, பாவனைகள், அறிவியல் - அழகியல் முயற்சிகள், சட்டம், பழக்க வழக்கங்கள்) | • உள்ளம், சிந்தனை, உணர்வுகளோடு தொடர்புடைய அகவய அம்சங்கள். |
| • நகர வாழ்வின் நிகழ்வுகள் அல்லது பெறுபேறுகள் | • நயத்தல், மேம்பாட்டை உணர்தல். |
| • வளர்ச்சியினை அளவிட முடியும். | • வளர்ச்சியினை அளவிட முடியாது |
| • நாகரிகம் உருவாவதற்கு தனிமனித முயற்சி போதுமானதல்ல. | • பண்பாடு உருவாவதற்கு தனிமனித முயற்சி ஏற்கத்தக்கது. |

**(இவை போன்ற 04 வேறுபாடுகள் குறிப்பிட்டிருப்பின் 04x01 = 04 புள்ளிகள்)**

**(ii) இஸ்லாமிய நாகரிகம் தோன்றி வளர்வதற்கு ஏதுவாய் அமைந்த பின்னணிக் காரணிகள் நான்கினை குறிப்பிடுக.**

1) அல்-குர்ஆன் வழங்கிய போதனைகள் - (தத்துவார்த்த அடிப்படைகள்)
2) ஸுன்னா வழங்கிய முன்மாதிரிகள்
3) இஸ்லாமிய வழிகாட்டல்களை மக்கள் பின்பற்றி வாழ்ந்தமை
4) பிற நாகரிகங்களுடனான தொடர்புகள்
5) ஆட்சியாளர்களது ஊக்குவிப்பு
6) அறிஞர்களின் பங்களிப்புக்கள்
7) பரந்து விரிந்த இஸ்லாமிய சாம்ராஜ்ய விஸ்தீரணம்
8) இஸ்லாத்தின் தனித்துவமான நியமங்களும் பெறுமானங்களும்

**(இவை போன்ற 04 பின்னணிக் காரணிகள் குறிப்பிட்டிருப்பின் 04x01 = 04 புள்ளிகள்)**

**(iii) இஸ்லாமிய நாகரிக வளர்ச்சிக்கு அல்-குர்ஆன் முன்வைக்கும் வழிகாட்டல்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

1) அறிவு, ஆராய்ச்சி, சிந்தனைக்கு தூண்டியுள்ளமை
2) ஆன்மீக, லௌகீக சமநிலையைப் பேணுவதற்கு வலியுறுத்துகின்றமை
3) பல நாகரிக சமூகங்களின் வரலாறுகளை முன்னுதாரணமாக பேசுகின்றமை
4) படிமுறையான சமூக மாற்றங்களை குறிப்பிடுகின்றமை
5) தனிமனித, குடும்ப, சமூக, அறிவியல், அரசியல், பொருளாதாரம், அழகியல் என அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டுகின்றமை
6) முஸ்லிம் சமூகத்தை தலைமைத்துவமிக்க முன்மாதிரிமிக்க சமூகமாக அடையாளப்படுத்தியமை

**(இவை போன்ற அல்-குர்ஆனிய வழிகாட்டல்கள் 04 குறிப்பிட்டிருப்பின் 04x01 = 04 புள்ளிகள்)**



CS CamScanner

(iv) இஸ்லாமிய நாகரிக வளர்ச்சியில் அப்பாஸியர்களின் பங்களிப்புகள் நான்கினை விளக்குக.

- அறிவியல்:
  - பைதுல் ஹிக்மாவும் அதன் பணிகளும்
  - அறிவியல் கண்டுபிடிப்புகளும் சாதனைகளும்
  - அறபு மொழி மேம்பாட்டுக்கு வழிவகுத்தமை
  - மொழி பெயர்ப்புப் பணி
  - பண்பாட்டு மத்திய நிலையங்களை உருவாக்கியமை
  - மையங்களும், நிறுவனங்களும்
- அரசியல்:
  - பக்தாத் நகர உருவாக்கம்
  - நிர்வாகக் கட்டமைப்பு
  - திணைக்களங்கள்
  - சர்வதேச அரசியல் பண்பாட்டு உறவுகள்
- கலைகள்
  - அழகியல், அறிவியல், சமயக் கலைகள்
- பொருளாதாரம்.
  - வரிகள்
  - வெளிநாட்டு வர்த்தகம்
  - விவசாய மேண்பாடு
  - துறைமுக அபிவிருத்தி
  - உள்நாட்டு உற்பத்தி
- பௌதீக வளங்களையும், நிறுவனங்களையும் மேம்படுத்தியமை.
- உள்நாட்டு அபிவிருத்தி

(இவை போன்ற பங்களிப்புக்கள் 04 விளக்கியிருப்பின் 04x01 = 04 புள்ளிகள்)

(v) மஸ்ஜித் கட்டிடக்கலையின் பிரதான கூறுகள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றை விளக்குக.

இஸ்லாமிய கட்டடக் கலை தனித்துவ சிறப்பம்சங்களைக் கொண்டது. அதனை மஸ்ஜித் கட்டடக் கலையில் சிறப்பாகக் கண்டு கொள்ள முடியும். ஆவற்றுள் மஸ்ஜித் கட்டடக் கலையின் பிரதான கூறுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

- மிம்பர்:

  பிரசங்க மேடை. இது கட்டடக்கலையின் பிரதான அம்சமாக மாறுமளவுக்கு பல்வேறு அமைப்புக்களில் மரப்பலகை, இரும்பு, செங்கற்கள், சலவைக்கற்கள் போன்றவற்றால் கலை நுணுக்கம் பேணி கட்டப்படலாயின.

- மிஹ்ராப்:

  கிப்லாவின் திசையைக் காட்டுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் கட்டடக்கலை கூறாகும்.

- மினாரா:

  பள்ளிவாசலை ஒட்டி அமைக்கப்படும் உயரமான தூண்களாகும். தொழுகைக்காக 'அதான்' கூறி அழைக்கும் ஒரு கோபுரமாகும்.

- குப்பா - கும்மட்டம்

  இது. பள்ளிவாசலுக்கு வனப்பையும் கம்பீரத்தையும் கொடுக்கும் ஓர் அம்சம் கொண்ட கூறாகும்.

- வளைமாடம் - மாடவில்:

  கவர்ச்சியான வளைவுகளைக் கொண்ட வளைமாடங்கள். இது பள்ளிவாசல் கட்டடக் கலைக்குக் கவர்ச்சியூட்டும் அம்சமாகும்.

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

- **ஹவ்ழ்:**

  தொழுகை முதலான வணக்கங்களுக்காக 'வுழூச்' செய்ய உபயோகிக்கப்படும் நீர்த் தடாகம்.

- **முஸல்லா:**

  தொழுகை நிறைவேற்றப்படும் பள்ளியின் உட்பகுதியை குறிப்பதாகும்.

**(எவையேனும் 04 கூறுகள் குறிப்பிட்டு விளக்கப்பட்டிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**(04 x ×05=20 புள்ளிகள்)**

**வினா இல: 02.**

**(i) கிலாபத், இமாரத் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.**

| கிலாபத் | இமாரத் |
|---|---|
| • நிர்வாகித்தல், பரிபாலணம் செய்தல் | • வளப்படுத்துதல், பண்படுத்தல். |
| • அல்லாஹ்வின் பிரதிநிதித்துவப் பொறுப்பை உலகில் நிலைநாட்டல் | • பிரதிநிதித்துவப் பொறுப்பை நிலைநாட்டி பூமியை வளப்படுத்தல் |
| • இறைவனுடன் தொடர்புடையது | • பிரபஞ்சப் பொருட்களுடன் தொடர்புடையது |
| • இறைவனின் விருப்பத்தையும். நாட்டத்தையும் மேலோங்கச் செய்யவும், ஷைத்தானின் வழிமுறைகளுக்கெதிராகப் போராடுதல். | • பிரபஞ்சப் பொருட்களை மனித இனத்திற்கு நலன் கிட்டும் வகையில் கையாளுதல். |
| • பொதுவானது | • குறிப்பானது |

**(இவை போன்ற வேறுபாடுகள் 04 குறிப்பிட்டிருப்பின் 04x01 = 04 புள்ளிகள்)**

**(ii) உஸ்மான் (ரழி) அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- **இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக பொருளாதார உதவிகள் செய்தமை**
  தபூக் யுத்தத்தின் போது பொருளாதார உதவிகள் செய்தமை.
  பி.்ரு ரூமா எனும் கிணற்றை வாங்கி வக்ப் செய்தமை.
- **அல்-குர்ஆனுக்கு ஆற்றிய பங்களிப்பு**
  குத்தாபுல் வஹியாக செயற்பட்டமை
  அல்குர்ஆனின் பால் மக்களை ஒன்றுபடுத்தியமை - ஜாமிஉல் குர்ஆன்
- கடற் படையை உருவாக்கியமை
- மஸ்ஜிதுன் நபவியை விஷ்தரிப்பு செய்தமை
- இஸ்லாமிய இராஜ்ஜியத்தை விரிவு படுத்தியமை
- இரண்டு ஹிஜ்ரத்களிலும் கலந்து கொண்டமை
- ஹுதைபிய்யா உடன்படிக்கையில் கலந்துகொண்டமை - பைஅதுர் ரிழ்வான்
- நபி (ஸல்) அவர்களது காலத்தில் இடம்பெற்ற பத்ர் தவிர்ந்த அனைத்து யுத்தங்களிலும் கலந்து கொண்டமை
- பலர் இஸ்லாத்தில் நுழைவதற்கு முன்னுதாரணமாக இருந்தமை

**(இவை போன்ற பணிகள் 04 குறிப்பிட்டிருப்பின் 04x01 = 04 புள்ளிகள்)**



CS CamScanner

(iii) ஒரு முஸ்லிம் தனது குடும்பத்துக்காகப் பேண வேண்டிய கடமைகள் நான்கினைக் குறிப்பிடு.

1) குடும்பத்துக்கான ஆன்மீக வழிகாட்டலை வழங்கள்
2) குடும்பத்துக்காக உழைத்து அவர்களது தேவைகளை நிறைவேற்றல்
3) குடும்பத்தை நிருவகித்தல்
4) நம்பிக்கையாக நடத்தல்
5) நீதியாக நடத்தல்
6) குடும்பத்தின் இன்ப, துன்பங்களில் பங்கேற்றல்
7) குடும்பத்தின் நற்பெயருக்காகப் பாடுபடுதல்
8) குடும்பத்தவரின் தேவைகளையும் உரிமைகளையும் அறிந்து செயற்படல்
9) குடுபத்தின் தலைமைத்துவத்தை ஏற்றல்
10) குடும்பத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

(இவை போன்ற 04 கடமைகள் குறிப்பிட்டிருப்பின் விளக்கியிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்

(iv) இறை சட்டத்தின் சிறப்பியல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

1) தெய்வீகத் தன்மை வாய்ந்தது (ரப்பானிய்யா)
2) பூரணத்துவம் மிக்கது (ஷுமூலிய்யா)
3) பொதுத்தன்மை (உமூமிய்யா)
4) யதார்த்தபூர்வமானது (அல்-வாகிஇய்யா)
5) நீதியானது (அல்-அத்ல்)
6) சர்வதேசத் தன்மை (அல்-ஆலமிய்யா)
7) நடுநிலையானது (வஸதிய்யா)
8) இலகுவானது
9) நெகிழும், நெகிழாத் தன்மை கொண்டது
10) கஷ்டங்களைப் போக்கக் கூடியது
11) மனித நலன்களைக் காப்பதே இலக்கு
12) சமூக நலன்களுக்கு மத்தியில் சமநிலை பேணுகின்றமை
13) பண்பாடுகளை காக்கும் தன்மை

(இவை போன்ற 04 சிறப்பியல்புகள் குறிப்பிட்டிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்

(v) சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் ரிஸாலத் முன்வைக்கும் வழிகாட்டல்கள் நான்கினை குறிப்பிடுக.

1) அனைத்து மனிதர்களும் ஒரே ஆன்மாவில் இருந்து படைக்கப்பட்டவர்கள்
2) உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் கண்ணியமானவர்கள்
3) கொள்கைச் சுதந்திரம்
4) மனித குலத்திற்கு நன்மை செய்வது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை
5) எல்லா மனிதர்களும் சகோதரர்கள்
6) எல்லா மனிதர்களும் அடிப்படையில் நல்லவர்கள்
7) பன்மைத்துவம் இறை நியதிகளில் ஒன்று
8) பரஸ்பர உதவிகளைச் செய்தல்
9) வஸதிய்யாவை அடிப்படையாகக் கொண்டவை – நடுநிலைப் போக்கு
10) சட்டத்தின் முன் சகலரும் சமன்

(இவை போன்ற 04 வழிகாட்டல்கள் குறிப்பிட்டிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்

(04x5=20 புள்ளிகள்)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

வினா இல: 03.

(i) **போலி ஹதீஸ்களின் தோற்றத்துக்கான காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.**

1) அரசியற் காரணிகள்
2) ஸிந்தீக்குகளின், இஸ்லாத்தின் எதிரிகளின் நடவடிக்கைகள்
3) மொழி, நாடு, இனம், மத்ஹப், இமாம் போன்வற்றுள் ஏற்பட்ட பற்று
4) கதை கூறல், உபதேசம் புரிவதிலுள்ள ஆர்வம்
5) பிக்ஹிலும் இல்முல் கலாமிலும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு
6) மார்க்கம் பற்றிய அறியாமையும், நன்மை செய்வதை ஊக்குவிக்கும் ஆர்வமும்
7) ஆட்சியாளர்களினதும் செல்வந்தர்களதும் நலன்களை நாடியமை
8) வியாபார, விளம்பர நோக்கங்களுக்காக புனைந்துரைக்கப்பட்டவைகள்

**(இவற்றுள் ஏதாவது 04 காரணிகள் குறிப்பிட்டிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

(ii) **அர்கானுல் கியாஸினைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக.**

1) அஸ்ல்: மூலச் சட்டம்
2) பர்உ: புதிய சட்டம்
3) இல்லத்: பொதுக் காரணி அல்லது பொதுப்பண்பு
4) ஹுக்ம்: சட்டம் அல்லது தீர்ப்பு

**(04 அர்கான்களையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கியிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

(iii) **அரபு எழுத்தணி ஒரு தனிக் கலையாக வளர்ச்சி கண்டமைக்கான காரணிகள் நான்கினைத் தெளிவுபடுத்துக.**

1) அல்-குர்ஆனும், ஸுன்னாவும் வழங்கிய தூண்டுதல்.
2) இஸ்லாத்தில், சித்திரம், ஓவியம், சிற்பம் போன்ற கலை வடிவத்திலுள்ள வரையறை எழுத்தணிக் கலையை தூண்டியது.
3) அல்-குர்ஆனைப் பிரதி பன்னவேண்டிய தேவை அதிகரித்தமை.
4) எழுத்தணிக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டமை.
5) ஓய்வு நேரங்களைப் பயனுள்ள முறையில் பயன்படுத்த அவசியப்பட்டமை.
6) பிற நாகரிகங்களைச் சேர்ந்த கலைஞர்கள் இஸ்லாத்தை ஏற்றமை.
7) ஆட்சியாளர்கள் வழங்கிய ஊக்குவிப்பு.
8) அறபு எழுத்துக்களின் இயல்பும், தன்மையும்
9) பாரஸீக முஸ்லிம்களின் பங்களிப்பு
10) ஜமாலிய்யத் (அழகுணர்வு), ஜலாலிய்யத் (ஆன்மீக உணர்வு) சமநேரத்தில் காணப்படுகின்றமை.
11) வருமானத்தை ஈட்டித்தந்தமை.
12) எழுத்தணிக் கருவிகள், சாதனங்கள் பெறப்பட்டமை.
13) கட்டடக்கலை வளர்ச்சிக்கு துணையாகக் காணப்பட்டமை.

**(04 காரணங்கள் தெளிவுபடுத்தியிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

CamScanner

**(iv) மருத்துவத்துறை அறிஞர் அபூபக்கர் ஸகரிய்யா அர்ராஸி அவர்களின் பங்களிப்புகள் நான்கினை விளக்குக.**

- மருத்துவக்கலை பற்றி நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளமை.
- அப்பாஸிய ஆட்சிக் காலத்தில் பொது மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்தமை.
- மருத்துவத்துறைக்கான பாடநூலாக அல் ஹாவி எனும் நூல் காணப்பட்டமை.
- பெரியம்மை, சின்னம்மை என்பவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை முதலில் கண்டறிந்து அல்ஜுதர் வல்ஹஸ்பா எனும் நூலில் விளக்கியமை.
- இவரது ஏராளமான நூற்கள் ஐரோப்பிய மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு மருத்துவத் துறையின் ~~பிரதான நூற்களாகக் காணப்படுகின்றமை.~~ வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளமை.
- கிரேக்க மருத்துவத் துறையை விருத்தி செய்து பாதுகாத்தமை.
- கிதாப் அல்மன்சூரி பித்திப்பி எனும் நூல் கிரேக்க மருத்துவ மேதை கெலனின் மருத்துவ நூலுக்கு சமமாக மதிக்கப்படுகின்றமை.
- சத்திர சிகிச்சை, பொது மருத்துவம் காய்ச்சல், வீக்கம் தொடர்பான விளக்கங்களை வழங்கியமை.

**(இவை போன்ற 04 பங்களிப்புக்களை விளக்கியிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

**(v) அகீதாவில் முரண்பாடு கொண்ட பிரிவினரால் ஏற்பட்ட விளைவுகள் நான்கினை விபரிக்க.**

1) ஏகத்துவத்திற்கு முரணான கொள்கைகள் தோன்றியமை.
2) முஸ்லிம் சமூகத்தில் ஐக்கியம் சீர்குலைந்தமை.
3) அர்த்தமற்ற வாதப்பிரதிவாதங்கள் அதிகரித்தமை.
4) அகீதா கோட்பாடுகள் சர்ச்சைகள் நிறைந்த ஒரு துறையாக நோக்கப்பட்டமை.
5) கட்டுப்பாடற்ற பகுத்தறிவுவாத சிந்தனை செல்வாக்கிற்கு முஸ்லிம் சமூகம் உட்பட்டமை.
6) இஸ்லாமிய கிலாபத் வலுவிழந்து சென்றமை.
7) பிற சமூக, கலாசார கருத்துக்கள் முஸ்லிம்களிடையே செல்வாக்குப் பெற்றமை.
8) இஸ்லாம் பற்றிய தப்பபிப்பிராயங்கள் பிறரிடம் உருவாகியமை.
9) கலீபாக்களும், முக்கிய தலைவர்களும் படுகொலை செய்யப்பட்டமை.
10) ஆறிவார்ந்த சிந்தனைப் போக்கு பலவீனப்பட்டமை.
11) தக்லீத் சிந்தனைக்கு உட்பட்டமை.

**(இவை போன்ற 04 கருத்துக்கள் விவரிக்கப்பட்டிருப்பின் 4x1 = 4 புள்ளிகள்)**

(04x5=20 புள்ளிகள்)

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

# பகுதி II

வினா இல: 04.

(i) **அல்-குர்ஆனைப் பாதுகாப்பதில் ஸஹாபாக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.**

- அறிமுகம்.
- ஸஹாபாக்கள் குர்ஆனை அடியோட்டிய முன்மாதிரி, முன்னோடி சமூகமாகக் காணப்பட்டமை.
- பொதுவாக ஸஹாபாக்களினால் அல்-குர்ஆன் பாதுகாக்கப்பட்ட விதம் பின்வருமாறு இருந்தது. (மனனம், எழுத்து, நடைமுறைப்படுத்தல், கற்றல் - கற்பித்தல்)

**அபூ பக்ர் (ரழி) காலம் - பாதுகாப்பு**

- யமாமாப் போரில் 70 இக்கும் அதிகமான ஹாபிழ்கள் ஷஹீதாக்கப்பட்டதன் விளைவாக உமர் (ரழி), அபூ பக்ர் (ரழி) அவர்களிடம் அல்குர்ஆனை தொகுக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொள்ளல்.
- இத்தகைய பணியை முன்னெடுப்பதற்கு ஸைத் பின் ஸாபித் (ரழி) தலைமை வகிக்க பணிக்கப்பட்டமை.
- இதன் விளைவாக ஒரு முஸ்ஹப் தொகுக்கப்பட்டது.

**உஸ்மான் (ரழி) காலம் - பாதுகாப்பு**

- ஆர்மேனிய - அஸர்பைஜான் யுத்தத்தின் போது அல்குர்ஆன் ஓதுவதில் முரண்பாட்டை அவதானித்த ஹுதைபதுல் யமானி (ரழி), இவ்விடயத்தை கலீபாவிடம் முன்வைத்தல்.
- ஓதுவதில் ஒருமைப்பாட்டை தோற்றுவிக்கும் செயற்திட்டத்திற்காக ஒரு குழுவை நியமித்தார்கள்.
  - ஸைத் பின் ஸாபித்,
  - அப்துல்லாஹ் இப்னு சுபைர்,
  - ஸஈத் பின் ஆஸ்,
  - அப்துர் ரஹ்மான் அல் ஹாரிஸ் (ரழி)
- ஏழு பிரதிகளைத் தயாரித்து மக்கா, மதீனா, கூபா, பஸரா, டமஸ்கஸ், எமன், பஹ்ரைன் ஆகிய பகுதிகளுக்கு காரிகளுடன் அனுப்பி வைக்கப்பட்டமை.
- ஸஹாபாக்கள காலத்தில் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சிக்குரிய ஒரு பிரதான விடயமாக அல்குர்ஆன் காணப்பட்டமை.
- அல்குர்ஆன் விரிவுரைக்கான காலமாகவும் காணப்பட்டமை.

**(அறிமுகத்துடன் 05 கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 5x2 =10 புள்ளிகள்)**

(ii) **தப்ஸீர் கலையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்குக.**

- **மொழிக்கருத்து.**

  அல்குர்ஆன் வசனங்களுக்கு வழங்கப்படும் விளக்கம்.

- **தப்ஸீரின் அவசியம்:** நபியவர்களுக்கு வஹி அருளப்பட்டதும் அதை மக்களுக்கு நபியவர்கள் எத்திவைப்பார்கள். மக்கள் விளங்காத போது மற்றொரு குர்ஆன் வசனத்தை வைத்து நபியவர்கள் விளக்கம் கொடுத்தே வந்துள்ளார்கள். எனவே நபியவர்களது காலத்திலேயே தப்ஸீர் கலை தோன்றியது.


CamScanner

**நபியவர்களது காலம்.**

- முதல் முபஸ்ஸிராக நபியவர்கள் காணப்பட்டார்கள்.
- அல்குர்ஆன் வசனங்களுக்கு விளக்கம் கூறுவது நபியவர்களின் பணியாகக் காணப்பட்டமை.

**ஸஹாபாக்களது காலம்.**

- நபித்தோழர்கள், அல்-குர்ஆனை விளங்கிக் கொள்வதில் படித்தரங்கள் காணப்பட்டமை.
- ஸஹாபாக்களில் குறிப்பிட்ட சிலரை அல்-குர்ஆனுக்கு விளக்கவுரை செய்வதற்கு முதன்மைப்படுத்தினார்கள். அதன் விளைவாக மக்கா, மதீனா, கூபா போன்ற பல நகரங்களில் தப்ஸீருக்கான வகுப்புக்கள் ஸஹாபாக்களால் நடாத்தப்பட்டமை.

**தாபிஈன்களது காலம்.**

- இதன் படிமுறை வளர்ச்சியாக தப்ஸீர் துறை மற்றொரு வளர்ச்சிக் கட்டத்தை அடைந்தது.
- தாபிஈன்களான இக்ரிமா, முஜாஹித் போன்றவர்கள் இத்துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தனர்.
- இக்காலப் பகுதியில் தப்ஸீர் இரு வகையாக நோக்கப்பட்டது. தப்ஸீர் மஃஸூர், தப்ஸீர் மஃகூல்.
- தாபிஈன்களின் பிற்பட்ட காலப்பகுதியில் தப்ஸீர் பிர்ரஃயில் பல கருத்துக்கள் உருவாகின.

**தபஉத் தாபிஈன்களது காலம்.**

- இக்காலப்பகுதி தப்ஸீர் கலையின் பொற்காலம்.
- ஹதீஸ் தனியாகவும் தப்ஸீர் தனியாகவும் வளர்ச்சி கண்டமை.
- துறைசார்ந்த தப்ஸீர்கள் வளர்ச்சியடைந்தமை.
- இக்காலப்பகுதியில் தப்ஸீர் பில்மஃஸூர் வலுவிழந்தமை.
- ஏனைய துறைகள் வளர்ச்சி அடைந்ததைப் போல் தப்ஸீர் துறையிலும் தனித்தனி துறைகள் தோன்ற ஆரம்பித்தன. (அகீதா, மத்ஹப், தஸவ்வுப், மொழி, இலக்கியம்)
- தப்ஸீர் கலையை பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை (உஸூலுத் தப்ஸீர்)

**தப்ஸீர் கலை வளர்ச்சியில் தேக்க நிலை.**

- எழுதப்பட்ட தப்ஸீர்களுக்கு மீள் விளக்கவுரைகள் எழுதும் முறை உருவானது.

**நவீன காலம்.**

- சமூக தேவைகளைக் கருதி அல்குர்ஆனை சமூகவியல் பார்வையில் முன்வைக்கும் பணி தொடங்கியது. (தப்ஸீரல் மனார்)
- ஆய்வியல், அரசியல், சமூகவியல் சார்ந்த துறைகளைக் கொண்டு பீ ழிழாலில் குர்ஆன் காணப்பட்டமை.
- விஞ்ஞானக் கருத்துக்களைக் கொண்டதாக அல்-ஜவாஹிருல் குர்ஆன் காணப்பட்டமை.

**(05 காலத்தையும் உள்ளடக்கி 10 அம்சங்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 10x1 = 10 புள்ளிகள்)**

CamScanner
අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

வினா இல: 05.

(i) கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களினது ஆட்சியின் சிறப்பியல்புகளை விபரிக்க.

கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் உமையா ஆட்சி முறை மரபுகளுக்கு மாற்றமாக தனதாட்சியில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டவகையில் அவரது ஆட்சி கீழ்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டு காணப்படுகின்றது:

- முன்னைய கலீபா ஸுலைமானின் நியமனத்தை ஏற்காது, மக்களின் அங்கிகாரத்தோடு பதவிக்கு வந்தமை
- எளிமையான வாழ்க்கைப் போக்கை முன்மாதிரியாகக்கொண்டு அரசை வழி நடாத்தியமை
- மஜ்லிஸுஸ் ஸுராவை மறுசீராக்கம் செய்தமையும் தகமையுடையவர்களுக்கு முதன்மை வழங்கியமையும்
- பைதுல் மால் சீரமைப்பு
- இஸ்லாமிய சூழல் உருவாக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கியமை
- மார்க்கப் பணிக்கான களத்தை அமைத்தமை
- சமய நல்லிணக்கம் பேணியமை
- அஹ்லுல் பைத்தினரை அரவணைத்தமை
- உமையா அரச குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த தனியான சலுகைகளை நிறுத்தியமை
- ஹதீஸ்களைத் தொகுக்கும் பணியை உத்தியோகபூர்வமாக மேற்கொண்டமை
- ஸக்காத் விநியோகத்தை பரவலாக்கி வறுமையை ஒழித்தமை
- தனது மெய்ப்பாதுகாவலர்களைக் கூட தவிர்த்துக்கொண்டமை
- இவர் முஜத்தித் காமில்', 'அல்-கலீபதுஸ் ஸாலிஹ்', 'இரண்டாம் உமர்', 'ராசிதூன்களின் வாரிசு' என்ற சிறப்புப் பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றமை

**அறிமுகம் - 02 புள்ளிகள்**

**(இவை போன்ற 8 சிறப்பியல்புகளை விபரித்திருப்பின் 8x1 = 08 புள்ளிகள்)**

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

CamScanner

(ii) அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத், ஷீஆ ஆகிய பிரிவினரின் கொள்கை வேறுபாடுகளை விபரிக்க.

இருபிரிவனர் பற்றி சுருக்க அறிமுகம் வழங்குதல்.

| ஷீஆக்கள்: | அஹ்லுஸ் ஸுன்னாக்கள்: |
|---|---|
| • நபியவர்களுக்குப் பின் அரசியல், ஆன்மீகத் தலைமைத்துவம் அலீ (ரழி) அவர்களுக்கும், அவர்களுக்குப் பின் அலீ (ரழி) - பாத்திமா (ரழி) அன்னவர்களினது குடும்பத்திற்கும் (வாரிசு அடிப்படையில்) சென்றடைய வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், தங்களை இனங்காட்டிக் கொண்டோர். | • பயபத்தியுள்ள, தகுதியுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாமிய அரசியல் ஆன்மீகத் தலைமைத்துவத்திற்கு தகுதியுடையோரே. |
| • இமாமத் என்பது நபித்துவத்தைப் போன்று அல்லாஹ்வால் வழங்கப்படுகின்ற ஓர் அம்சம் என நம்புவதுடன் அதனை ஈமானின் ஓர் அம்சமாகவும் ஏற்கின்றனர். | • தகுதியும் திறமையும் கொண்ட ஒருவர் முஸ்லிம் சமூகத்திற்கு கட்டளையையும் பிறப்பிக்க தகுதியுடையோராக வர முடியும். |
| • தற்போதுள்ள அல்-குர்ஆன் குறைபாடுடையது. 12ஆவது இமாம் மீண்டும் வரும்போது உண்மையான அல்-குர்ஆன் கொண்டுவருவார். அதுவரை தற்போதுள்ள குர்ஆனை பின்பற்ற முடியும். | • தற்போதுள்ள அல்-குர்ஆன் உண்மையானது என்றும், அது அல்லாஹ்வின் பாதுகாப்பு உத்தரவாதம் பெற்றது என்றும் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளனர். |
| • அலி (ரழி) மற்றும் அஹ்லுல் பைத்தினர் ஊடாக தெரிவிக்கப்படும் ஹதீஸ்களை மட்டுமே ஏற்றுக் கொள்வர். | • ஸஹாபாக்களால் அறிவிக்கப்படும் நம்பகமான ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வர். |
| • அஹ்லுல் பைத்திலுள்ள ஸஹாபாக்களை மாத்திரம் தூய்மையாளர்களாகவும், நம்பகத் தன்மையுடையவர்களாகவும் ஏற்கின்றனர், ஏனைய ஸஹாபாக்களை அங்கிகரிக்காமை. | • அனைத்து ஸஹாபாக்களையும் கண்ணியமாகவே கருதுகின்றமை. |
| • இமாம்களை மஃஸூம்களாகவும், வஹீ கிடைக்கப் பெற்றவர்களாகவும் ஏற்கின்றனர். | • நபிமார்கள், ரஸூல்மார்கள் மாத்திரமே மஃஸூம்கள் என்றும் நபி (ஸல்) அவர்களின் பின் வஹீ வரமாட்டாது என்றும் நம்பிக்கை கொண்டுள்ளனர். |
| • தகிய்யா - 'உண்மையை மறைத்தல்' இவர்கள் மார்க்கம், மானம், உயிர், செல்வம், கொள்கை போன்றவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உண்மையை மறைக்கலாம் எனும் கோட்பாட்டைக் கொண்டுள்ளனர். | • எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் உண்மையை மறைக்க முடியாது. |

இரு பிரிவுகள் பற்றிய அறிமுகம் - 02 புள்ளிகள்

(இவை போன்ற 4 வேறுபாடுகள் வேறுபடுத்தி விளக்கியிருப்பின் 4x2 = 08 புள்ளிகள்)

(மொத்தம் - 10 புள்ளிகள்)

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

வினா இல: 06.

(i) கலீபாவாகப் பதவியேற்ற அபூபக்கர் (ரழி) அவர்கள் எதிர்கொண்ட சவால்களை விளக்குக.

அறிமுகம்

- முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை உறுதி செய்ய வேண்டி ஏற்பட்டமை.
- கிலாபத் நிறுவனத்தை நிலைப்படுத்துவதற்கு முன்னுதாரணமாக செயற்பட வேண்டி இருந்தமை.
- ஸகாத் மறுப்பை முறியடித்து அதனை பிரதான மூலோபாயமாக உறுதிப்படுத்தியமை.
- போலி நபிமார்களை எதிர் ஒழித்து தூய இஸ்லாத்தை பாதுகாத்தமை.
- உஸாமா (ரழி) அவர்களின் தலைமையில் படை அனுப்புவதில் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்தியமை.
- நபியவர்களின் வபாத்துக்குப் பின்னர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறும் போக்கை (முர்தத்) உறுதி பூண்டு தடுத்தமை.
- இஸ்லாமிய மூலாதாரமான அல்குர்ஆனை தொகுத்து பாதுகாத்தமை.

அறிமுகம் - 02 புள்ளிகள்

(இவை போன்ற 4 சவால்களும் எதிர்கொண்ட விதமும் விளக்கியிருப்பின் 4x2 =08 புள்ளிகள்)

(மொத்தம் - 10 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் சிற்றரசுகளின் தோற்றம் ஏற்படுத்திய விளைவுகளை தெளிவு படுத்துக.

**அறிமுகம்:** அப்பாஸிய காலத்தில் ஆட்சியாளர்களின் பலவீனம், இயலாமை காரணமாக ஆட்சியாளர்களுக்கு துணையாக இருந்த கவர்ணர்கள், உமராக்கள் தங்களை சுய ஆட்சியாளர்களாகப் பிரகடனப்படுத்தியமை போன்ற மேலும் பல விடயங்கள் சிற்றரசுகள் தோற்றம் பெற காரணமாக அமைந்தது எனலாம்

- கிலாபத் பலவீனப்படுத்தப்பட்டமை.
- புதிய அரசியல் சிந்தனை உருவானது.
- அறிவியல் பாரம் பரியத்துக்கு வித்திட்டது.
- துருக்கிய ஆட்சி மரபுக்கு வித்திட்டமை.
- இந்தியா போன்ற தூர இடங்களுக்கு இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவாக்கம் அடைந்தமை.
- முஸ்லிம்களுக்கிடையில் போரும் அதிகாரப் போட்டியும் தோன்றியமை.
- முஸ்லிம் உம்மாவின் ஐக்கியம் சீர்குழைந்தமை.
- முஸ்லிம்கள் மீதான அந்நிய படையெடுப்புக்கள் இலகுவாக மேற்கொள்ள வழிகோழியமை.
- பண்முகப்படுத்தப்பட்ட இஸ்லாமிய பண்பாட்டு வளர்ச்சிக்கு தூண்டியமை.
- முஸ்லிம்களின் ஐக்கியம் சீர் குலைந்தமை.
- அப்பாஸியர் வீழ்சிக்கு வித்திட்டமை.
- இஸ்லாத்தின் பிராந்திய வளர்ச்சிக்கு இவ்வாறான சாதக, பாதக விளைவுகளை சிற்றரசுகளின் தோற்றம் ஏற்படுத்தியது.

அறிமுகம் - 02 புள்ளிகள்

(இவை போன்ற 4 விளைவுகள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 4x2 = 08 புள்ளிகள்)

(மொத்தம் - 10 புள்ளிகள்)



CamScanner

வினா இல: 07.

(i) ஜாஹிலிய்யாக் கால சமூகக் கட்டமைப்புப் பற்றி தெளிவுபடுத்துக.

அறிமுகம்

1. கோத்திரங்களை மையப்படுத்திய சமூக அமைப்பு காணப்பட்டமை.
2. 'அஸபிய்யா' என்ற கோத்திர உணர்வு மேலோங்கிக் காணப்பட்டமை.
3. கோத்திரங்களை மையமாகக்கொண்ட தலைமைத்துவம் காணப்பட்டமை.
4. கோத்திரங்களை மையமாகக்கொண்டு சமூகக் கட்டமைப்பு காணப்பட்டமையால் போராட்ட சூழல் மேலோங்கியிருந்தமை.
5. ஹழரிக்கள், பதவிக்கள் என இருவகையினர் காணப்பட்டமை.
6. ஜாஹிலிய்ய சமூகத்தில் பல்வேறுபட்ட திருமண முறைகள் காணப்பட்டமை.
7. சமூகக் கட்டமைப்புக்கு பக்கபலமாக பல்வேறுபட்ட பொருளாதார முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டமை.
8. ஆணாதிக்க சமூக அமைப்பு காணப்பட்டமை.
9. அடிமைத்துவம் வழக்கில் இருந்தமை.
10. அவர்களிடம் காணப்பட்ட அறியாமை காரணமாக சமூக விரோத செயல்கள் குற்றங்களாப் பார்க்கப்படாமை.
11. நற்பண்புகள் சிலதும் காணப்பட்டமை. (எளிமை, வாக்குமீறாமை, விருந்தோம்பல், சுதந்திர வேட்கை, வீரம்)

அறிமுகம் - 01 புள்ளிகள்
(இவை போன்ற 6 கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 6x 1 ½ = 09 புள்ளிகள்)
(மொத்தம் - 10 புள்ளிகள்)

(ii) சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதில் ஷரீஆவின் பங்கு பற்றி விளக்குக.

அறிமுகம்

குடும்பங்களின் தொகுதி சமூகமாகும். சிறந்த சமூக உருவாக்கத்தில் ஷரீஆ சிறந்த வழிகாட்டல்களை முன்வைத்துள்ளது.

1. இஸ்லாமிய ஷரீஆவின் இலக்கு தூய சமூக அமைப்பொன்றை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டமை.
2. நபி (ஸல்) அவர்கள் மக்காவில் சமூகத்துக்கு தேவையான தனி மனிதர்களையும், அவர்கள் ஊடாக குடும்பங்களையும் உருவாக்கியமை.
3. சிறந்த சமூக அமைப்பொன்றை உருவாக்குவதற்கான சூழல் மக்காவில் அமையப் பெறாமையினால் ஹிஜ்ரத்துக்கான பொருத்தமான இடங்களைத் தேடியமை.
4. மதீனா ஹிஜ்ரத்துக்குப் பின்னர் மஸ்ஜித் நபவியை அடிப்படையாகக் கொண்டு சிறந்த சமூகமொன்றை உருவாக்கியமை. ஷரீஆ வழிகாட்டியமை.
5. சகோதரத்துவம், தலைமைத்துவக் கட்டுப்பாடு, விட்டுக் கொடுப்பு போன்ற சிறந்த பண்புகளைக் கொண்ட சமூகமொன்றை உருவாக்கியமை. (அல் ஹுஜராத் - 10)
6. தனிநபர்களுக்கும், சமூகத்துக்குமிடையிலான சகோதரத்துவத்தை ஏற்படுத்தி சிறந்ததொரு கொள்கை வழிச் சமூகத்தை கட்டியெழுப்பியமை.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

Past Papers Wiki

7. இஸ்லாத்தின் கூட்டுக் கடமைகள் சமூகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதனை இலக்காகக் கொண்டு காணப்பட்டமை.

8. தனி நபர்களை சமூகத்துடன் பிணைப்பதற்கான வழிகாட்டல்களை முன்வைத்துள்ளமை.

உடலின் உறுப்புக்களுக்கும், கட்டடத்தில் கற்களுக்கும் உவமைப்படுத்திக் காட்டுகின்றமை.

சந்தித்தால் ஸலாம் கூறல். தும்மினால் பதில் கூறல், விருந்துக்கு சமூகமளித்தல், நோயாளியை நலம் விசாரித்தல், ஜனாஸாவில் பங்கு கொள்ளல்.

9. சகோதரத்துவ கூட்டிணைப்பு முறிவடையக்கூடிய காரணிகளை ஷரீஆ அடையாளப்படுத்துகின்றமை. (அல்-ஹுஜராத் - 09, 11)

10. சமூகத்தின் பலம், உறவுகள் பேணப்படுவதில் தங்கியிருப்பதாக ஷரீஆ விளக்குகின்றமை. (அந்நிஸா 36)

11. சமூக உறவுகளைப் பேணும் விடயத்தில் சமூகத்திலுள்ள ஒவ்வொரு அலகுகளையும் தனித்தனியே ஷரீஆ வழிகாட்டுகின்றமை. (அண்டை வீட்டார், நண்பர்கள், அநாதைகள், ஏழைகள், பிற மதத்தவர்கள்)

12. சமூக ஒழுக்க விழுமியங்களை பாதுகாப்பதற்கான சட்ட விதிகளை முன்வைத்துள்ளமை.

**அறிமுகம் - 02 புள்ளிகள்**

**(இவை போன்ற 8 கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 8x 1 = 08 புள்ளிகள்)**

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

**வினா இல: 08.**

**(i) அரேபிய - இலங்கை உறவினால் ஏற்பட்ட விளைவுகளை விபரிக்க.**

**அறிமுகம்**

1. கரையோர, உள்ளகக் குடியேற்றங்கள்
2. பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டமை (வர்த்தகம், நெசவுத் தொழில், கடற்பயணம், தவள போக்குவரத்து முறை, மருத்துவ முறை போன்றவை)
3. சுதேசப் பெண்களை திருமணம் முடித்தமையினால் ஏற்பட்ட சமூகப் பரம்பல்
4. இலங்கைக்கும், அறபு நாடுகளுக்குமிடையில் நட்புறவு ஏற்பட்டமை
5. சர்வதேச உலகில் இலங்கை அறிமுகமானமை (யாத்திரியர்களின் குறிப்பு, வணிகப் பொருட்கள் மூலம்)
6. இஸ்லாம் அறிமுகமானமையும், சமய, கலாசார, பண்பாடுகள் நடைமுறைக்கு வந்தமையும்
7. ஏற்றுமதி - இறக்குமதி வலுப்பெற்றமை
8. தேசியப் பங்களிப்புக்களில் பங்கேற்றமை
9. முஸ்லிம்களுக்கும் மன்னர்களுக்குமிடையிலான நல்லுறவும், நல்லுணர்வும் ஏற்பட்டமை

**(அறிமுகம் - 02 புள்ளிகள்)**

**(இவை போன்ற 05 விளைவுகள் விபரிக்கப்பட்டிருப்பின் 08 புள்ளிகள்)**

**(மொத்தம் - 10 புள்ளிகள்)**

5 - 8
4 - 6
3 - 5
2 - 3
1 - 1



CamScanner

(ii) சுதந்திரத்துக்கு முன்னரான இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்புகள் பற்றி விபரிக்க.

அறிமுகம்

- முஸ்லிம்களின் இலங்கை உடனான உறவு தொன்மையானது.
- இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்புகள் ஆரம்ப காலம் தொட்டு பேணப்பட்டு வருகின்றமை.

- மன்னர்களுடனான உறவு
  விஜயபாகு (கி.பி.1055-1070) மன்னனின் முடிசூட்டு விழாவுக்கு பெரிய தம்பி மரிக்காரின் ஒத்துழைப்பும், மன்னனின் விசுவாசத்துக்குரியவராகவும், வணிகத்துறை தொடர்பான இணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

- முஸ்லிம்கள் அமைச்சர்களாகவும், அதிகாரிகளாகவும் உயர்பதவிகளில் அங்கம் வகித்தமை.
  கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அறபுப் பிரயாணி அல்-இத்ரீஸி, சிங்கள மன்னர் ஒருவரிடம் முஸ்லிம் அமைச்சர்கள் நால்வர் பணியாற்றினர் எனும் தகவலைத் தருகிறார்.

- முஸ்லிம்கள் தூதுவர்களாக செயற்பட்டமை.
  கி.பி. 1283 இல் இலங்கை மன்னன் எகிப்துக்கு அனுப்பிய தூதுக் குழுவுக்கு 'அபூ உஸ்மான்' என்பவர் தலைமை தாங்கிச் சென்றமை

- ஒரு முஸ்லிம் முடி சூடும் அளவிற்கு முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்பு சிறப்புப்பெற்றமை.
  குருநாகல் காலம் - வஸ்துஹிமி

- அரச சபை வரவேற்பாளர்களாக முஸ்லிம்கள் இருந்தமை.
  கண்டி மன்னனை சந்திக்க ஆங்கிலத் தூதுவர் 'ஜோன் பைப்பஸ்' என்பவரை மன்னனின் சார்பில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரே வரவேற்று உபசரித்தமை.

- திணைக்களத்தின் பொறுப்பாளராக செயற்பட்டமை.
  கீர்த்தி ஸ்ரீ இராஜ சிங்ஹன் காலத்தில் 'மடிகே பத்த' என்னும் திணைக்களத்தின் பொறுப்பாளராக 'சேக் ஆஸிக்' (ஆலிக்) என்னும் முஸ்லிம் அதிகாரி இருந்தமை.
- சட்ட நிருபண சபை மற்றும் மாநகர, உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகித்தமை.
  கி.பி. 1833 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட நிருபண சபையில் கி.பி. 1889 முதல் முஸ்லிம்களும் அங்கம் வகித்தனர்.
  கி.பி. 1865 இல் அறிமுகமான மாநகர, உள்ளூராட்சி மன்றங்களில் முஸ்லிம்களுக்குப் பங்குகொள்ள வாய்ப்புக் கிடைத்தது.


- இலங்கையின் சுதந்திரப் போராட்டங்களில் முஸ்லிம் அரசியல் முன்னோடிகள் பரவலாக பங்காற்றியமை.
  டி.பி. ஜாயா, எம்.சீ. சித்திலெப்பை, பதியுத்தீன் மஹ்முத்

5 - 8
4 - 6
3 - 5
2 - 3
1 - 1


(அறிமுகம் - 02 புள்ளிகள்)
(இவை போன்ற 05 பங்களிப்புக்கள் விபரிக்கப்பட்டிருப்பின் 08 புள்ளிகள்)
(மொத்தம் - 10 புள்ளிகள்)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner



වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න
LOL
Book Store
25% OFF
ALL BOOKS
Including Exercise Books,
CR Books, and B5 Books
ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්
ORDER BOOKS FROM LOL BOOKS STORE
0372060110
WWW.LOL.LK
071 777 4440 (WhatsApp)
Cash On Delivery Available


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!